# திம்புலாகல பிரதேச சபை
# பொலன்னறுவை மாவட்டம்

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 16 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மே 02 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஒக்தோபர் 22 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள திம்புலாகல பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகக் கிடைக்க வேண்டிய நன்னீர் மீன் விற்பனைக்குரிய வியாபார உரித்தின் வாடகைக் கட்டணம் ரூபா 583,300 தொகை நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தன.

(ஆ) சபைக்குரிய 58 மயான நிலங்களின் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய சீறீபுர நீர் உத்தேசத்திட்டம், நுவரகல நீர் உத்தேசத்திட்டம் மற்றும் வெஹெரகல நீர் உத்தேசத் திட்டம் என்பவைகளுக்குரிய காணி, நீர் பம்பிக்கூடம் என்பவற்றை உள்ளடக்கிய உபகரணங்கள் சபைக்குக் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றின் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

**(அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐய வினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்களின் கணிப்பீடு செய்யக்கூடிய பெறுமதி ரூபா 30,000 ஆகும்.

**(ஆ) கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 30,221,373 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 10,008,833 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 3,303,858 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 2,016 | 1,568 | 1,091 |
| (ii) | வாடகை | 129 | 50 | 200 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 484 | 485 | 335 |
| (iv) | ஏனைய வருமானம் | 25,598 | 30,768 | 7,343 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 4,895,268 ஆகும்.

## 2.3 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டதன் பிரகாரம் சில சொத்துக்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்து வகை | செயற்படாதிருந்த காலம் |
|---|---|---|
| (i) | புல் வெட்டும் இயந்திரம் | காலம் தீர்மானிக்கப்படவில்லை |
| (ii) | மோட்டார் சைக்கில் | 06 வருடங்கள் |

### 2.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

(அ) மீளாய்வாண்டின் வருமானக் கடன்பட்டோர் ரூபா 106,062 தொகை மற்றும் கடன்கொடுத்தோர் ரூபா 669,654 தொகை என்பன திரண்ட நிதியத்தில் பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 182 ஆவது பிரிவின் பிரகாரம் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஏ) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டாமல் மீளாய்வாண்டின் திசெம்பர் 01 ஆந் திகதி திம்புலாகல அதிகாரப் பிரதேசத்தில் அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் நடைபெற்ற ஒன்றுகூடல் ஒன்றுக்காக உபசரிப்புச் செலவினம் ரூபா 73,500 இனையும் உள்ளடக்கி ரூபா 151,597 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) வடமத்திய மாகாண பிரதம அமைச்சு மற்றும் உள்ளூராட்சி அமைச்சரின் 2009 திசெம்பர் 19 அந் திகதிய 1528/21 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தலைவருக்கு ஒரு பிரதேச செயலகப் பிரிவில் ஒன்றிணைந்த பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்காக மாதத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் 400 லீற்றர் எல்லையினை விஞ்சி மீளாய்வாண்டின் போது 1158 லீற்றர் டீசலுக்காக ரூபா 91,855 செலவினம் சபை நிதியத்திலிருந்து செய்யப்பட்டிருந்தது.

(ஈ) பிரதேச சபைத் தலைவருக்கு மாதாந்தம் ரூபா 1,000 உபசரிப்புப் படியும் சபைக் கூட்டத்திற்காக சபை நிதியத்திலிருந்து ஒரு உறுப்பினருக்குச் செய்யக்கூடிய உபசரிப்புச் செலவினப்படி ரூபா 50 எல்லையினையும்

விஞ்சி மீளாய்வாண்டின் போது ரூபா 11,447 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

## 2.5 ஒப்பந்த நிருவாகம்

அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.9.1 மற்றும் 2011 செப்தெம்பர் 27 ஆந் திகதிய 452 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் ஒன்றுக்கு ஒப்பந்தங்களைக் கையளிக்கும் போது ஏதாவது ஒரு காலத்தில் சங்கத்தினால் நிறைவேற்றப்படுகின்ற மொத்த ஒப்பந்த எண்ணிக்கை 03 இற்கு மேற்பட முடியாதிருந்ததுடன் தற்போது கையளிக்கப்பட்ட ஒப்பந்தங்களின் எஞ்சிய பகுதிகளின் மொத்தப் பெறுமதி மற்றும் உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தப் பெறுமதி என்பவற்றின் கூட்டுப்பெறுமதி ரூபா 2 மில்லியனை விஞ்ச முடியாதிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக 3 விவசாயச் சங்கங்களுக்கு ரூபா 11,996,005 கூட்டுப்பெறுமதியான 29 ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன.

## 2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

சபைக்குக் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள், எதிர்வரும் வருடங்களில் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட முறைகளைக் காண்பிக்கின்ற கூட்டிணைந்த திட்டம் மற்றும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் சபையில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கட்டுப்பாடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு